DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT,
KARAIKUDI.
C.C. No.136/2024 DW.2

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | மாரியப்பன் | த-பெ க.பெ. | பழனியப்பன் |
| ஊர்: | : | காரைக்குடி | சமயம்: | |
| வயது: | : | 45/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | கம்யூட்டர் சேல்ஸ் | மாவட்டம் | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20.11.2025

---

20.11.2025

**முதல் விசாரணை :**

1) 2012 ல் என் தம்பியினுடைய 5 காசோலைகள், 2 கடனுறுதிசீட்டுகள், பச்சைக்கலர் கான்கொயர் சீட்டு -5 என் அம்மாவின் உடல் நிலை சரியில்லாத காரணத்தாலும், எனக்கு பணத் தேவை இருந்ததாலும், என் தம்பியிடம் இருந்து பெற்றேன். அதில் 2 காசோலைகளைகளில் 000011 என்ற எண்ணிற்கு சங்கர் என்பவரிடம் கொடுத்து ரூ 1 லட்சமும், 000012 ல் முருகேசன் என்பவரிடம் கொடுத்து ரூ. 20 ஆயிரமும் பெற்றேன். 2012 ன் கடைசியில் சங்கரிடம் பெற்ற கடனை திரும்ப கொடுத்துவிட்டேன். முருகேசனிடம் பெற்ற தொகையை 2013 ல் கொடுத்து முடித்துவிட்டேன். என் தம்பியிடம் அவரின் காசோலைகளை கொடுத்து கடன் பெற்ற தொகையை திருப்பி செலுத்தி முடித்து விட்டதாக கூறிவிட்டேன். 2013 ல் என் தம்பி அவரின் அந்த வங்கி கணக்கை முடித்துவிட்டார். என் தம்பியிடம் பெற்ற காசோலைகள், கடனுறுதிசீட்டுக்கள், பச்சைக் கலர் கான்கொயர் சீட்டு ஆகிவற்றை என் கடையில் வைத்திருந்தேன். என் தம்பி வங்கி கணக்கை

**முடித்துவிட்டதாக சொன்னதால் நான் அசால்ட்டாக இருந்துவிட்டேன். 2024ல் பொங்கல் சமயத்தில் என் கடைகளை சுத்தம் செய்யும்போது மேற்படி ஆவணங்களை நான் எங்கு வைத்தேன் என்று நினைவில்லை.**

**2) என் தம்பிக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்த பின்னர்தான் எனக்கு வழக்கு போட்டுள்ள விபரம் தெரியும் அது பற்றி என் தம்பி என்னிடம் கேட்டார். அதன் பின்னர் எனக்கு என்ன செய்வதென்று தெரியாமல் மீண்டும் என் கடைக்கு சென்று தேடிப்பார்த்தேன். மேற்படி ஆவணங்கள் எதுவும் கிடைக்கவில்லை என்ற விபரத்தை என் தம்பியிடம் சொல்லிவிட்டேன். என் அலட்சியத்தால் மேற்படி ஆவணங்கள் தொலைந்துவிட்டது.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2025.11.20 18:07:17 +0530

விரைவு நீதிபதி, காரைக்குடி.( மு.கூ.பொ)